5 School - KH Head
RMSA - Teachers.
3 KH Head.

மார்ச் மற்றும் ஏப்ரல் 2015ம் மாதத்திற்கு
சம்பளம் வழங்கும் அதிகாரம்
(Pay Authorization
for the month of March-April 2015)

பள்ளிக் கல்வித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

கடித எண்.11450/அகஇ/2015–1, நாள் 27.4.2015.

அனுப்புநர்
திருமதி த.சபிதா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18/35.
கருவூல கணக்கு ஆணையர், சென்னை–15.

ஐயா,

பொருள்: பள்ளிக்கல்வி – அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் 2009–2010ம் கல்வி ஆண்டில் 200 ஊராட்சி ஒன்றிய, நகராட்சி, நலத்துறை நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டது – அப்பள்ளிகளுக்கு தோற்றுவிக்கப்பட்ட 1200 பட்டதாரி ஆசிரியர் மற்றும் 200 உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களுக்கு மார்ச் 2015 மற்றும் ஏப்ரல் 2015 மாதங்களுக்கு ஊதியம் வழங்கிட அதிகார ஆணை (Pay Authorization) வழங்க வேண்டுதல் – சார்ந்து.

பார்வை
1. அரசாணை (நிலை) எண்.64, பள்ளிக் கல்வி, நாள் 15.3.2010.
2. அரசாணை (1டி) எண்.251, பள்ளிக் கல்வி, நாள் 7.9.2011.
3. அரசு கடித எண்.4225/அகஇ/2015–1, நாள் 3.3.2015.
4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண் 033244/எல் 3/2014, நாள் 27.03.2015.

-------

பார்வை 1ல் காணும் அரசாணையில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் 2009–10ம் நிதியாண்டில் 200 ஊராட்சி ஒன்றிய, நகராட்சி / நலத்துறை நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டன. அப்பள்ளிகளுக்கு 1200 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 200 உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்கள் ஆக மொத்தம் 1400 ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டன. மேற்காண் பணியிடங்களுக்கு 31.05.2014 வரை பார்வை 2ல் காணும் அரசாணையில் தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. பள்ளிக் கல்வி இயக்குநர் தனது கடிதத்தில் பிப்ரவரி 2015 வரை ஊதியம் வழங்கும் அதிகார ஆணை (Pay Authorisation) வழங்கப்பட்டுள்ளதாலும், தொடர் நீட்டிப்பு வழங்குவதில் காலதாமதம் ஏற்படும் பட்சத்தில், மேலும் மார்ச் 2015 மற்றும் ஏப்ரல் 2015 ஆகிய இரண்டு மாதங்களுக்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை (Pay Authorisation) வழங்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காண் பணியிடங்களுக்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு, அரசின் பரிசீலனையில் உள்ளதால், 1400 பட்டதாரி ஆசிரியர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களுக்கு மார்ச் 2015 மற்றும் ஏப்ரல் 2015 ஆகிய இரண்டு மாதங்களுக்கு சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான பட்டிகள், உரிய அலுவலர்களால் தாக்கல் செய்யப்படும் போது அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் ஏற்றுக் கொண்டு சம்பளம் அனுமதிக்குமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

4. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.எண்.23071/Edn-II/2015, நாள் 27.04.2015–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

27/4/15

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

நகல்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
நிதி (கல்வி–II) துறை, சென்னை–9.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

மாநிலத் திட்ட இயக்ககம், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் சென்னை-6.
திட்ட இயக்குநரின் செயல்முறைகள்
ந.க. எண். 456/அ2/அஇகத/2015, நாள். -04-15

— x —

(நகல்) அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்/ முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு (அஇகத) உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்து அனுப்பி வைக்கப்படுகிறது.

திட்ட இயக்குநா
மாநிலத் திட்ட இயக்ககம்
அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்
சென்னை - 6.

பெறுநர்:
அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்/ முதன்மைக் கல்வி அலுவலர்கள்
அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்.

29/04/15